# The Book

By

Garry Jacobs

## முன்னுரை

பிப்ரவரி 21, 1956,

ஆசிரமத்திடலில் அன்று,

ஸ்ரீஅன்னையும், மற்றோரும் கூடி தியானித்திருக்க,

அன்னை தன் சூட்சுமப் பார்வையில் கண்டது,

தங்கக் கதவு ஒன்று வழியை மறித்தவாறு,

தங்கச் சுத்தியலால் அதைத் தகர்த்தெறிந்த அந்நேரம்,

சத்தியஜீவியப் பேரொளி பிரவாகமாய் பூமி நோக்கி கீழிறங்க,

உலகத்து இருள் சக்திகள் ஒன்று கூடி அதை உள்விழுங்க,

உலகத்தை உருமாற்றும் ஒரு பரிணாம நிகழ்வு,

அந்நேரத்தில் நடந்தேறியது, யாரும் அறியாமலேயே.

எனினும்,

மனித குல அறியாமையை பெரிதாய் கருதாமல்,

புவியின் ஏற்புத்திறனின்மையை  பிழையாய் நினையாமல்,

என்றும் செயல்பட்டுக் கொண்டேதானிருக்கிறது, சூட்சுமத்தில் அச்சக்தி,

மற்றும் அதன் நோக்கில் வழிநடத்திக் கொண்டேதானியிருக்கிறது,

புவியை அதன் பரிணாமப் பாதையில்.

புரட்சிகர மாற்றங்கள் பல கண்டதிந்த உலகம்,

அவையனைத்திற்குப் பின்னாலும் ஆழமானதொரு நோக்கம்,

பரபரப்பான மேல்மன நிகழ்வுகளுக்கு நடுவே,

அடிப்புறத்தில் அனைத்திற்கும் ஆழ்ந்த ஓர் அர்த்தம்,

1956 -க்குப் பின் நடந்த அனைத்து அத்தகைய நிகழ்வுகளிலும்,

ஆதாரமாய் செயல்பட்டுக்கொண்டே தானிருக்கிறது அச்சக்தி.

அக்டோபர் 1964, பெர்க்லி நகரம், கலிபோர்னியா –

அங்கு நிகழ்ந்த மாணவர்களின் பேச்சுரிமைப் போராட்டம்,

ஆகஸ்ட் 1968, பிராக், செக்கோஸ்லோவாக்கியா –

அங்கு சோவியத் யூனியனின் பலத்தை நிரூபிக்கும் இராணுவ அணிவகுப்பு,

பிப்ரவரி 1971, செயின்ட் பீட்டர்ஸ்பர்க், இரஷ்யா –

அங்கு முக்கியமற்றதை போல் நடந்த ஓர் அரசியல் விவாதம்,

செப்டம்பர் 1989, பெர்லின், மேற்கு ஜெர்மனி -

பெர்லின் சுவர் உடையும் முன் நடந்த சூட்சும நிகழ்வுகள்,

போன்ற பல குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்…

அவ்வனைத்து நிகழ்வுகளின் போதும்,

தன்னிருப்பை  சூட்சுமமாய் வெளிப்படுத்திய அச்சக்தி,

அடுத்து வர இருப்பதையும் சூசகமாய் அறிவித்தது,

அந்நேரத்திலெல்லாம் தோன்றிய ஒரு மர்மமான புத்தகத்தின் மூலம்.

அந்நிகழ்ச்சிகளின் போதிருந்த ஒரு சிலர் மட்டும்,

சில நொடிகள் புரட்டிப் பார்க்கும் பேறு பெற்றனர் அந்த புத்தகத்தை,

அடுத்து நேர்ந்த அடுக்கடுக்கான சந்தர்ப்ப சூழ்நிலையால்,

அவர்களனைவருமே தவற விட்டனர் அந்த புத்தகத்தை,

யாரொருவராலும் நிரந்தரமாய் உடைமையாக்க முடியவில்லை அந்த புத்தகத்தை,

எனினும் அந்த புத்தகம் நெடுநாட்களாக காத்திருந்தது,

நல்ல ஓர் இடத்திற்காக,

நல்ல ஒரு நேரத்திற்காக,

நல்ல ஒரு மனிதருக்காக…

பிப்ரவரி 2004, MAI அலுவலகம், பெர்க்லி, கலிபோர்னியா,

கடந்த கால நினைவுகளில் கரைந்திருந்தார் டேன்,

உயர்ந்த நோக்கத்தோடும், இலட்சியத்தோடும் ஆரம்பிக்கப்பட்டது MAI,

எனினும் முதல் புராஜெக்ட் MAIS-ன் அதிர்ச்சித் தோல்வி,

அதனுடன் சேர்ந்து கொண்ட பொருளாதார நெருக்கடி நிலை,

அதைத் தொடர்ந்து வேறேதும் புராஜெக்ட் இல்லாமை,

ஆதலால் கேள்விக்குறியானது அவர்கள் நிறுவனத்தின் கதி,

எனினும், ஓர் அதீத நம்பிக்கை, விடாமுயற்சியுடன் போராட்டம்,

பார்ட்னர்களிடையே பரஸ்பர சுமுகம்,

அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்ததால்,

இன்னும் ஜீவியத்துடனிருந்தது அவர்கள் நிறுவனம்.

அந்நேரத்தில் எஞ்சியிருந்த ஒரே ஒரு வாய்ப்பு,

NASA-வுக்கு அவர்கள் கொடுத்திருந்த ஓர் உத்தேச திட்டம்…

நினைவுகளில் ஆழ்ந்திருந்த டேனை தட்டியெழுப்பியது ஒரு மின்னஞ்சல்,

உண்மையாகவே அது NASA- விடமிருந்து,

“அவர்கள் கொடுத்த திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது” என்ற செய்தியுடன்!,

அவர்களின் கனவுக் கோட்டையைத் தகர்த்தெறிந்தது அச்செய்தி,

என்றாலும் அதைக்கண்டு React ஆகவில்லை டேன்,

அடுத்தென்ன செய்வது, புரியவில்லை அவருக்கு.

ஒன்றும் புரியாமல் அவர் பார்க்க நேர்ந்த தொலைக்காட்சியில், அந்நேரம்,

ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது அமெரிக்க கால்பந்தாட்டமொன்று,

San Francisco 49ers மற்றும் Cincinnati Bengals,

இவற்றிற்கிடையே நடைபெற்ற ஆட்டத்தின் மறுஒளிபரப்பு,

தோல்வியின் விளிம்பிலிருந்தது San Francisco 49ers அணி,

ஆட்டம் முடிவதற்கு மூன்று நிமிடங்கள் மட்டுமே!,

எவரந்த நிலையைப் பார்த்ததுமறிவர்,

அந்த அணியின் தோல்வி தவிர்க்க முடியாதென்று,

அணித் தலைவர் ஜோ மான்டானா (Joe Montana) – வைத் தவிர,

அந்நொடியிலும், அத்தோல்வியின் விளிம்பிலும்,

உற்சாகம் குறையாமல், பேரானந்தத்தோடு விளையாடி,

அடுத்த மூன்று நிமிடங்களில் போட்டியை வென்றதோடு,

வரலாற்றையும் மாற்றி எழுதினார் அவர்.

என்ன ஓர் உத்வேகமான, உயிர்த் துடிப்புள்ள விளையாட்டு!

அதில் ஒன்றிய டேனுக்கு பிறந்தது புத்துணர்ச்சி,

கவலை ஏதுமின்றி நடக்க ஆரம்பித்த அவர்,

எண்ணமின்றி, இலக்கின்றி வந்தடைந்தது Moe's புத்தகக் கடைக்கு,

எல்லாம் முடிந்து விட்டதென மேல்மனம் முடிவு செய்திருந்த பொழுது,

எல்லாமே இனிமேல்தான் என அடிமனம், அருளின் செயல்பாட்டாய்,

அழைத்து வந்திருந்தது அவரை அங்கு, அந்நேரத்தில்…

கீழடுக்கில் சில புத்தகங்களை அவர் புரட்டிப் பார்க்க,

அந்நேரத்தில் நிகழ்ந்தது அது!

மேலடுக்கு ஒன்றிலிருந்து ஒரு புத்தகம் அவர் மடி மீது விழ,

அது ஒரு பெயரிடப்படாத, எழுத்தாளர் பெயரில்லாத, வித்தியாசமான புத்தகம்!,

என்னவென்று ஆர்வத்துடன் அவர் புரட்டிப் பார்க்க,

அவருக்கென காத்திருந்தது ஒரு செய்தி,

"சாதனையே மகிழ்ச்சி, மகிழ்ச்சியே சாதனை"

விற்பனையாளருக்கும் அதைப் பற்றிய விபரம் தெரியாததால்,

அந்த புத்தகத்தை அவர் எடுத்துச் செல்ல அனுமதிக்க,

புத்தணர்ச்சியோடும், புது உற்சாகத்தோடும் வீடு சென்றார் டேன்,

இறுதியில் அந்த புத்தகம்,

தனக்கென ஓர் இடத்தை முடிவு செய்து விட்டது,

தனக்கென ஒருவரைத் தேர்ந்தெடுத்து விட்டது,

தன் வேலையைத் தொடர்வதற்காக…

அது என்ன புத்தகம்?

அதனுடைய நோக்கம் என்ன?

டேனுக்கும், MAI-க்கும் என்னாயிற்று?

இனிவரும் பக்கங்ககளைப் புரட்ட,

அந்த புத்தகமே விடையளிக்கும்….

“அந்த புத்தகம்”

**இது புத்தகத்தின் கதையல்ல,**

**இது புத்தகத்தில் உள்ள “அந்த புத்தகத்தின்” கதை.**

***